வாக்குமூலம்

குற்றவியல் நீதிமன்றம், இராமநாதபுரம்

வழக்கு எண் MCOP. No. 5/2024

வழக்கு சாட்சி – எ.ம.சா. 1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | :: திரு. இளவேந்தன் | தொழில் | :: நிர்வாக அதிகாரி |
| த/ பெயர் | :: நடராஜன் | வயது | :: 39 |
| கிராமம் | :: | | |
| தாலுகா | :: மதுரை | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of 03.03.2026.

**முதல் விசாரணை** (நேரம் : நண்பகல் 12.50 மணி)

நான் 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் நிர்வாக அதிகாரியாக பணியாற்றுகிறேன். என்னுடைய சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையெழுத்துகள் என்னுடையவைதான். என்னுடைய தகவலின் அடிப்படையில் தான் அவை தயார் செய்யப்பட்டது. **1ம் எதிர்மனுதாரர் வாகன காப்பீடு சான்று நகல் எ.ம.சா.ஆ.1.** விபத்து சம்பந்தமாக பதிவுச் செய்யப்பட்ட குற்ற வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட **மாதிரி வரைபடம் ஜெராக்ஸ் நகல் எ.ம.சா.ஆ.2.** (எ.ம.சா.ஆ.2. ஆவணம் மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் ஆட்சேபணைக்குட்பட்டு குறியீடு செய்யப்பட்டது). மனுதாரர் ஓட்டிச்சென்ற வாகனத்தின் **மோட்டார் வாகன ஆய்வறிக்கை நகல் எ.ம.சா.ஆ.3.** எங்கள் நிறுவனத்தை பொறுத்து மனுவை தள்ளுபடி செய்யுமாறு வேண்டுகிறேன்.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை –**

சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது, ஆவணங்களின் அடிப்படையில் தெரியும். புலன் விசாரணையின் அடிப்படையில் விபத்து சம்பவம்

J JEYA SUTHAHAR

Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2026.03.03 17:12:30 +0530

பற்றி எனக்கு தெரியும். புலன் விசாரணை செய்த அதிகாரி சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை. சம்பவம் பற்றி நிரூபண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள விபரங்கள் மேற்படி புலன் விசாரணை அதிகாரி சொன்னதை வைத்து சொல்லியுள்ளேன் என்றால் புலன் விசாரணை அதிகாரியும், வாகனத்தின் உரிமையாளாரும் சொன்னதை வைத்து அதில் சொல்லியுள்ளேன். எ.ம.சா.ஆ.2 வரைபடம் ஒரு தோராய வரைபடம் என்றால் சரிதான். அந்த வரைபடத்தை யார் எப்போது வரைந்தார்கள் என்று எனக்கு தெரியாது. சம்பவம் நடந்து எத்தனை நாளுக்கு பிறகு அந்த வரைபடம் வரைப்பட்டது என்று தெரியாது. தோராய வரைபடத்தை வைத்து விபத்திற்கு யார் மீது தவறு என்று நிர்ணயம் செய்ய முடியாது என்றால் சரியல்ல. விபத்து சம்பந்தமாக 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநர் மீது தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் அவர் மீது தவறாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது தவறானது என்று கூறி 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநர் புகார் எதுவும் கொடுக்கவில்லை. விபத்து 1ம் எதிர்மனுதாரர் வாகனம் எங்கள் நிறுவனத்தில் முறையாக காப்பீடு செய்யப்பட்டிருந்தது என்றால் சரிதான். எனவே மனுதாரருக்கு எங்கள் நிறுவனம் தான் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை.**

சாட்சி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்குப் படித்து காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

J JEYA SUTHAHAR
Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2026.03.03 17:12:35 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,
இராமநாதபுரம்.